(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 113.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011, ஓகத்து 11, வியாழக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0860/ '10

1.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) கல்வி அமைச்சரினால், பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) குறித்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறையிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் மாவட்ட மற்றும் கல்வி வலய ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) இதன்பொருட்டு நிதி வழங்கும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iv) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் நாளொன்றுக்கு ஒரு மாணவனுக்கு ஒதுக்கப்படும் பணத்தொகை மற்றும் வழங்கும் உணவு யாது என்பதையும்;

(v) இந்த நிகழ்ச்சித் திட்டம் பாடசாலை மட்டத்தில் எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படுகிறது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிகழ்ச்சித் திட்டதின் கீழ், பாடசாலைகளுக்கு உணவு வழங்குகின்ற அநேகமான கல்வி வலயங்களில் உணவு வழங்குநர்களுக்கு உரிய முறையில் பணம் செலுத்தப்படவில்லை என்பதையும்;

(ii) உணவு வழங்குநர்களுக்கு பணம் செலுத்துவது தாமதமாயுள்ளதால் இவர்களுக்கு அநீதி நேர்த்துள்ளதென்பதையும், இதனால் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு தடை ஏற்படுவதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி உணவு வழங்குநர்களுக்கு இறுதியாக பணம் செலுத்தியுள்ள மாதம் யாதென்பதையும்;

(ii) தற்போது இவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள நிலுவைத் தொகை அந்தந்த மாவட்டங்கள் மற்றும் கல்வி வலய ரீதியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0880/ '10

2\.

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை சட்டக் கல்லுரியின் மொத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதை அவர் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும்,

(i) விரிவுரைக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்பக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பரீட்சையின் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வேறு வழிகளில் இலங்கை சட்டக் கல்லுரிக்கு கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(v) இலங்கை சட்டக் கல்லூரியின் செலவினம் எவ்வளவென்பதையும்

தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை சட்டக் கல்லூரியின் நிதி முகாமைத்துவத்தை ஒழுங்கு முறைப் படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்;

(ii) 2009 ஆம் ஆண்டுக்கான நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விரிவுரைக் கட்டணங்களை அதிகரிக்காது இலங்கை சட்டக் கல்லுரியின் நடவடிக்கைகளைப் பேணிவர முடியாதாவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0962/ '10

3\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) யுத்தத்துக்குப் பின்னர் வடக்கு, கிழக்கு அபிவிருத்திப் பணிகளுக்காக இயந்திர உபகரணங்களை வழங்கிய நாடுகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு நாடும் வழங்கிய இயந்திர உபகரணங்களின் பெயர்களும் அவற்றின் பெறுமதியும் அந்தந்த நாடுகளுக்கமைய வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு இயந்திரமும் கிடைக்கப்பெற்றுள்ளது அன்பளிப்பாகவா, உதவியாகவா அல்லது கொள்வனவாகவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி இயந்திர உபரகணங்கள் விநியோகிக்கப்பட்டுள்ள பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஆளுகைப் பிரதேசத்துக்கும் விநியோகிக்கப்பட்டுள்ள இயந்திர உபகரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0977/ '10

4.

கௌரவ எம்.ரீ.ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) கல்வி அமைச்சினால் குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகளாக இனங்காணப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இப்பாடசாலைகளில் முஸ்லிம் பாடசாலைகள் மற்றும் தோட்டப் பாடசாலைகளின் எண்ணிக்கை தனித்தனியே யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளின் வளர்ச்சிக்காக எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் தனித்தனியே யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

1026/ '10

5.

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2008, 2009, 2010 ஆகிய வருடங்களில் இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகளாக கிடைத்த நிதித் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி வருடங்களில் போதுமானளவு வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு கிடைத்தனவா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1073/ '11

6.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்புத் திட்டத்தின் கீழ் அரசாங்க பாடசாலை மாணவர்களின் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தும் நோக்கத்துடன் மர வேலைகள், உலோக வேலைகள், மட்பாண்ட வேலைகள், நெசவு, மேசன் கலை மற்றும் வானொலிக் கலை ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டனவென்பதையும்;

(ii) தற்போது இப்பாடங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஆக்கத்திறனும் தொழில்நுட்பவியலும் எனப்படுகின்ற புதிய ஒருங்கிணைந்த பாடமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இப்பாடம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பாடசாலைகளில் இப்பாடத்திற்கான பாரிய ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது என்பதையும்;

(iv) தற்போது இப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு போதுமான பயிற்சி வழங்கப்படுவதில்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆக்கத்திறனும் தொழில்நுட்பவியலும் பாடத்திற்கு புதிதாக ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில் அதற்காக எடுக்கப்படும் காலம் எவ்வளவென்பதையும்;

(iii) இதன்பொருட்டு 2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) புதிய பாடத்தைக் கற்பிக்கும் பொருட்டு மேற்படி ஆசிரியர்களுக்கு முறைசார்ந்த பயிற்சியை வழங்குவதற்காக திட்டங்கள் தயாரிக்கப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில் இப்பயிற்சிப் பட்டறைகள் ஒழுங்கு செய்யப்படும் திகதிகள் யவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1235/ '11

7.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1027/ '10

8.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இம்மாணவர் சந்ததிக்கு பாடசாலை நடைபெறும் அனைத்து நாட்களிலும் மதிய உணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1052/ '10

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க பாடசாலைகளுக்கு மதிய உணவு வழங்குவதற்காக மாதாந்தம் அரசாங்கம் செலவிடும் தொகை யாதென்பதையும்;

(ii) பாடசாலைகளுக்கு மதிய உணவு வழங்கப்படுவதை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மதிய உணவு வழங்கல் இடைநிறுத்தப்படுவதால் நிர்க்கதியாகும் பாடசாலை மாணவர்கள் சார்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1074/ '11

10.

கௌரவ புத்திக பத்திரண,— போக்குவரத்து அமைச்சரைக்கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்து சபைக்குரிய மொத்த டிப்போக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த டிப்போக்களுக்குரிய மொத்த பஸ் வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) வினைத்திறன்மிக்க பயணிகள் போக்குவரத்துச் சேவையொன்றை நடத்துவதற்கு அந்த பஸ் வண்டிகளின் எண்ணிக்கை போதுமானதா என்பதையும்;

(iv) புதிய பஸ் வண்டிகளை கொள்வனவு செய்து அவற்றை பயணிகள் போக்குவரத்துக்கு சேர்ப்பதற்கான திட்டம் இருக்கின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்துச் சபைக்கு புதிய பஸ் வண்டிகளை கொள்வனவு செய்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பின் அதன்படி கொள்வனவுசெய்ய உத்தேசித்துள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த பஸ்வண்டிகள் உடன் காசு செலுத்தப்பட்டு கொள்வனவு செய்யப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்படுமா என்பதையும்;

(iv) பஸ் வண்டிகள் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்படுவதாக இருந்தால், கடன் வழங்கும் நிறுவனம் யாது என்பதையும்;

(v) அந்த கடன் தொகைகளை செலுத்தி முடிக்கவுள்ள திகதி எது என்பதையும்;

(vi) அதற்காக அறவிடப்படும் வட்டி வீதம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1236/ '11

11.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக கமத்தொழில் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1028/ '10

12.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் அரசாங்கப் பாடசாலைகளில் கல்விபயிலும் சந்ததியினரின் போஷாக்கு நிலைமை யாதென்பதையும்,

(ii) மேற்படி பாடசாலை மாணவர்கள் மத்தியில் போஷாக்கின்மை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் சதவீதம் யாதென்பதையும்,

(iii) பாடசாலை மாணவர்களின் போஷாக்கின்மை நிலைமையை இல்லாதொழிப் பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி நடவடிக்கைகள் பாடசாலை மாணவர்களின் போஷாக்கின்மை நிலைமையை இல்லாதொழிப்பதற்கு போதுமானதா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1053/ '10

13.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யுத்தம் முடிவடைந்த நாளிலிருந்து 2010 ஆம் ஆண்டு இறுதி வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இனந்தெரியாத தாக்குதல்களால் கொல்லப்பட்ட சிவில் பிரஜைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இப்படுகொலைகளுக்கு காரணமாயிருந்த விடயங்கள் கண்டறியப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அவை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி படுகொலைச் சம்பவங்களில் இதுவரை விசாரணை நடாத்தி தீர்க்கப்பட்டுள்ளவைகளின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(ii) தீர்க்கப்படாத படுகொலைச் சம்பவங்கள் எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி படுகொலைச் சம்பவங்கள் தீர்க்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1076/ '11

14.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது நாடு பூராவும் அரசாங்க பாடசாலைகளில் பதில் அதிபர்களாக பெருளமளவில் சேவையாற்றுகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவர்களை அதிபர் சேவைக்கு உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) இதற்காக உபயோகிக்கும் முறைமையியல் யாதென்பதையும்;

(iii) இதற்கு முன்னர் பதில் அதிபர்களை அதிபர் சேவைக்கு உள்ளீர்ப்பதற்காக பிரயோகிக்கப்பட்ட முறைமையியல் யாதென்பதையும்;

(iv) மேற்படி முறைமையியலை பின்பற்றி தற்போது பதில் அதிபர்களாக சேவையாற்றுபவர்களையும் குறித்த சேவைக்கு உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) ஆமெனின், அது எத்திகதியில் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1237/ '11

15.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## அனுதாபப் பிரேரணைகள்

1.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஈ.பி. போல் பெரேரா

2.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பி.ஓ. விமலநாக

3.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ என்.எம். புஹார்டின்

4.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சரத் சந்திர ராஜகருணா

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2011.04.07 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், 2011.08.12 ஆம் திகதி சபை அமர்வு நேரம் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

இலங்கை பிரயோக புள்ளிவிபரவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

2.

தெஹிவளை நெதிமாலை பௌத்த கலாச்சார நிலையம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

3.

ஐக்கிய இலங்கை பிக்குமார்களுக்கான அபிவிருத்தி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

4.

தேசமான்ய ரவீந்திர வணிகசேகர ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

5.

இலங்கை ஔடதங்கள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

6.

ஜோன் செனவிரத்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

7.

அங்கவீனர்களுக்கான ஆலோசனை உதவிகளையும் வழங்குவதற்கான திதொரா தியேட்டர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

8.

ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நிதி திட்டமிடல் அமைச்சரினால், உற்பத்தி வரி தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதிய 1702/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 11.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 12.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உபபிரிவின் கீழ், நிதி திட்டமிடல் அமைச்சரினால், துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதிய 1703/1 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நிதி திட்டமிடல் அமைச்சரினால், உற்பத்தி வரி தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 மே மாதம் 16 ஆம் திகதிய 1706/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரவின் கீழ் கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சரால் நிதி திட்டமிடல் அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் செஸ் வரி தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 மார்ச்சு மாதம் 04 ஆந் திகதிய 1695/31 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சட்டத்தின் 15 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 22 ஆம் பிரிவின் கீழ் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதிய 1701/1 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.07.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 21.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 22.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 23.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 24.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 25.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 26.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 27.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

28.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

29.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.